# கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் – நீலகிரி மாவட்டம்
## விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கான தேர்வு 2020
## விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

1. விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் அதற்கென உரிய விண்ணப்பத்தில் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். ஒரே விண்ணப்பத்தில் இரண்டு பதவிக்கும் விண்ணப்பிக்கக் கூடாது.
2. விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யும் முன்பு விண்ணப்பதாரர்கள் தேர்வு தொடர்பான அறிவிக்கை மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை முழுமையாகவும் கவனமாகவும் படித்த பின்னர் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தினை தங்களது சொந்த கையெழுத்தில் நீலம் அல்லது கருப்பு நிற பந்துமுனைப் பேனா (Ball Point Pen) கொண்டு நிரப்ப வேண்டும்.
4. விண்ணப்பத்தில் அடித்தல் திருத்தல்கள் எதுவும் இருக்கக்கூடாது.
5. விண்ணப்பத்தில் அனைத்து கலங்களும் விடுதலின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
6. கலம் 7 (அ) ல் விண்ணப்பதாரர் தனது இனம் (Community) கலம் 7(ஆ)ல் வகுப்பு(Caste) மற்றும் கலம் 7(இ)ல் உட்பிரிவு (Sub- Caste) ஆகியவற்றை குறிப்பிடவேண்டும்.

| | | |
|---|---|---|
| O.C. | இ.வ. | Other Communities(இதர வகுப்பினர்) |
| B.C. | பி.வ. | Backward Class (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) |
| B.C.M. | பி.வ.மு | Backward Class Muslim (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் – முஸ்லீம்) |
| M.B.C. /D.C. | மி.பி.வ/சீம | Most Backward Class/Denotified Communities. (மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர்) |
| S.C. | ஆ.தி | Scheduled Caste(ஆதி திராவிடர்) |
| S.C.A. | ஆ.தி.அ | Scheduled Caste- Arunthathiar (ஆதி திராவிடர் /அருந்ததியர் |
| S.T.. | பழ | Scheduled Tribe (பழங்குடியினர்) |

7. கலம் 16, 16(அ) மற்றும் 16(ஆ)ல் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத்திறனாளி, முன்னாள் இராணுவத்தினர்,முன்னாள் இராணுவத்தினரை சார்ந்தவர் மற்றும் ஆதரவற்ற விதவை இவை தவிர பிற சிறப்பு முன்னுரிமை கோரும் பிரிவைச் சார்ந்தவர் எனில் அதனைக் குறிப்பிட வேண்டும்.

உதாரணம்: 1. கலப்பு மணம் புரிந்தவர் (இதில் தம்பதியரில் எவரேனும் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பட்டியல் பழங்குடியின இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.

2. பர்மா, இலங்கை அகதிகள்

8. விண்ணப்பத்துடன் அடியிற் குறிப்பிட்ட சான்றிதழ்களின் சுய சான்றிடப்பட்ட அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் சான்றொப்பமிட்ட ஒளியச்சு நகல்கள் இணைத்து அனுப்பபட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை அனுப்பக் கூடாது.

அ) கல்வித் தகுதிச் சான்றிதழ்
ஆ) பிறந்த தேதி சான்றிதழ்
இ) சாதிச் சான்றிதழ்
ஈ) மாற்றுதிறனாளி சான்றிதழ்
உ) ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழ்
ஊ) முன்னாள் படை வீரருக்கான சான்றிதழ்
எ) முன்னுரிமை கோரும் பிரிவுக்கான சான்றிதழ்
ஏ) தமிழ் வழியில் படித்ததற்கான சான்று ( Certificate relating to Peron studied in Tamil Medium)
ஐ) நன்னடத்தை சான்று (விண்ணப்பதாரர் தான் இறுதியாக படித்த பள்ளி, கல்லூரியில் பெற்ற நன்னடத்தை சான்று
ஒ) அரசிதழ் பதிவு பெற்ற ஏதேனும் ஒரு அலுவலரிடமிருந்து இந்த அறிவிக்கை நாளுக்கு பின்னர் பெற்ற ஒரு நன்னடத்தை சான்றிதழ்.

9 விண்ணப்பதாரரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றினை விண்ணப்ப படிவத்தில் ஒட்டுவதுடன், தனியே ஒரு புகைப்படத்தினை படிவத்துடன் இணைப்பதுடன் சுய முகவரியிட்ட ரூ.22/–க்கான தபால் வில்லை ஒட்டிய 24 **X** 10 செ.மீ.உறையினையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

10 நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் அல்லது ஏதேனும் ஒரு கிளையில் முப்படி சலான் (**Triplicate Challan**) மூலம் விண்ணப்பக்கட்டணத்தினை செலுத்தி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய சலான் நகலின் **(DRB copy)** அசல் பிரதியினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பக்கட்டணம் செலுத்த தேவையான முப்படி சலான் அனைத்து நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளிலும் கிடைக்கும்.

11 <u>பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:</u>
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ **15.07.2020** பிற்பகல் **5.45** மணிக்குள் கீழ்கண்ட முகவரியில் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். அஞ்சலக தாமதம் போன்ற காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,
(District Recruitment Bureau for Cooperatives)
பிளாக் - **IV** மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் வளாகம்,
பிங்கர் போஸ்ட், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் - 643 006.

**15.07.2020** அன்று பி.ப.5.45க்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

''''''''''''